**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23.09.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் ரிலையன்ஸ் உயிர் சக்தி நிறுவனம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ரிலையன்ஸ் உயிர் சக்தி நிறுவனத்துடன் 20.09.2024 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், முன்னிலையில் உயிர் சக்தி உற்பத்திக்கான தீவனப் பயிர்களை அடையாளம் காண்பதற்காக கையொப்பமானது.

இன்றைய சூழலில், உயிர் சக்தி ஆற்றலுக்கான தேவை அதிகரித்துள்ளது. மேலும், இந்த தேவையை பூர்த்தி செய்வதற்கு அதிக தாவர உற்பத்தி திறன் மற்றும் புதுபிக்கத்தக்க வளங்கள் கொண்ட தீவனப் பயிர்கள் உகந்ததாகக் கருதப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் கீழ் இயங்கும் தீவனப் பயிர் துறையின் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட தீவனப் பயிர் இரகங்கள் அதிக தாவர உற்பத்தி திறன் கொண்டவை. அதிக கரிமப்பொருள் மற்றும் அதிக தாவர உற்பத்தி திறன் கொண்ட கம்பு நேப்பியர் புல், உயிர் சக்தி உற்பத்திக்கு சிறந்த மூலபொருள் ஆகும்.

முனைவர் இரா.தமிழ்வேந்தன், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பாகவும், ரிலையன்ஸ் உயிர் சக்தி நிறுவனத்தின் சார்பாக திரு. பசீர் அகமது சிராசி, முதன்மை செயல் அலுவலர், ஆர்.பி.இ.எல், மும்பை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மைய இயக்குனர் முனைவர் ஆர்.இரவிகேசவன், தீவனப் பயிர் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். ஆர். புஷ்பம், தீவனப் பயிர் துறையின் விஞ்ஞானிகள், ஆர்.பி.இ.எல், ஹைதராபாத் முதன்மை மேலாளர், ஆர்.பி.இ.எல், மும்பை திரு ஜி.ஆனந்தன், திரு.பாலாஜி பெருமாள் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். உயிர் சக்தி ஆற்றல் உற்பத்திக்கு ஏற்ற தீவனப் பயிர்களை எவ்வாறு பயிர் செய்ய வேண்டும் என்ற தொழில் நுட்பத்தை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆர்.பி.இ.எல் நிறுவனத்திற்கு வழங்கும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**